# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 244/மா/2017

ஆணை எண். 72/2018

நாள் : 27/03/2018

**திரு B. இரமேஷ்,**
**சென்னை – 600 104.** – முறையீட்டு மனுதாரர்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 14,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,** – எதிர் மனுதாரர்
**சென்னை – 600 091..**

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், எண்.222, புதிய கூடுதல் சட்ட அறை முகவரியைச் சேர்ந்த திரு B. இரமேஷ் அவர்களின் 11.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2017 அன்று பெறப்பட்டு 244/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள், அவரது வாக்குமூலம் மற்றும் சென்னை மாநகராட்சி, 14–வது மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், எண்.222, புதிய கூடுதல் சட்ட அறை முகவரியைச் சேர்ந்த திரு B. இரமேஷ் என்பவர், சென்னை மடிப்பாக்கம் கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதியின் குடியிருப்புவாசிகளின் நலனுக்காக செயல்பட்டு வரும் "M F Orchid Owner's Welfare Association" என்ற சங்கத்தின் சட்ட ஆலோசகர். சட்ட ஆலோசகராக செயல்பட்டு வரும் முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட பகுதி மக்களின் நலனுக்கு

எதிராக மாநகராட்சி அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். அதன் விவரம் வருமாறு :-

(1) கிருஷ்ணாநகர் விரிவுப் பகுதியிலிருந்து விஷால் நகர் வரை செல்லும் தரமான சாலையை மழை நீரை வடிப்பதற்காக JCP இயந்திரம் கொண்டு பாழ்படுத்தியது ;

(2) சாலையினை பழுதாக்கியதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது. குறிப்பாக கிருஷ்ணாநகர் பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியே சாலைக்கு வர இயலாத நிலை ஏற்பட்டது ;

(3) சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் ஒப்புதல் இல்லாமல் சாலைக்குப் பழுது ஏற்படுத்தியது ;

(4) மாநகராட்சி அலுவலர்கள் சட்ட அறிவிப்புக்கு முறையாக பதில் அளிக்கத் தவறியது;

(5) மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் செயல்களால் மாநகராட்சியின் நிதி வீணடிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களுக்கு தீங்கு விழைக்கவிக்கப் பட்டுள்ளதால் சீர்கேடான நிர்வகாம் என கருதுவது.

2. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து 14 –வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. மடிப்பாக்கம் பகுதி சென்னை மாநகராட்சியுடன் 2011–ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட இணைப்பு பகுதி என்றும், இப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் மற்றும் கழிவு நீர் வடிகால்வாய் வசதி ஏதும் இல்லை என்று தனது அறிக்கையில் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதியை ஒட்டி பல்வேறு நகர்கள் உள்ளனவென்றும், அந்நகர்களில் உள்ள வீடுகள் கிருஷ்ணா நகர் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு முன்பே கட்டப்பட்டவை என்றும் குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணா நகர் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பிருந்தே இயற்கையாக அப்பகுதி வழியாக மழைநீர் வடிந்து கீழ்கட்டளை கால்வாய் வழியாக வெளியேறும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இயற்கையாக இருந்த நிலத்தின் மட்டத்தை உயர்த்தி கிருஷ்ணாநகர் விரிவுப் பகுதி ஏற்படுத்தப்பட்டதால், அருகில் அமைந்துள்ள விஷால் நகர் விரிவுப் பகுதி மற்றும் ரெயின்போ அவென்யூ பகுதிகளில் மழைநீர் தேங்கி வீடுகளுக்கு மழைநீர் புகுந்ததால் மழைநீர் தேக்கத்தினை அகற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதனையும் தெரிவித்துள்ளார். கடந்த நவம்பர் திங்களில் பெய்த மழையின் போது, விஷால் நகர் விரிவுப் பகுதிகளில் தேங்கிய மழைநீரை வடிப்பதற்காகவே சாலை ஓரம் JCB இயந்திரம் கொண்டு கால்வாய் தோண்டப் பட்டதென்றும், கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து வாகனம் மற்றும் குடியிருப்பு மக்கள் வெளியேற பெரிய அளவிலான சிமெண்ட் குழாய்கள் அமைக்கப்பட்டன என்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். தோண்டப்பட்ட கால்வாய்கள் அனைத்தும் மழைகாலம் முடிந்தவுடன் மண் நிரப்பப்பட்டு சாலை சமன் செய்யப்பட்டு விட்டதென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

3. 14.03.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போதும் மேற்குறிப்பிட்ட விவரங்களை உறுதி செய்ததுடன், K.F.W. நிதி உதவியுடன் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளனவென்றும், அப்பணி முடிவுற்றபின் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட்டுவிடும் என்று உறுதி அளித்தார். மேலும், நவம்பர் திங்களில் பெய்த மழையின் போது அமைச்சர் பெருமக்கள் மற்றும் மழைக்கால பணிகளை ஒருங்கிணைக்க நியமனம் செய்யப்பட்ட இந்திய ஆட்சிப்பணி அலுவலர் ஆகியோரின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட பணி மேற்கொள்ளப்பட்டதென்று விசாரணையின்போது தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரரிடம் 14.03.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ரூ.8.25 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்ட சாலை பழுதாக்கப்பட்டுள்ளதென்றும், சாலையை தோண்டும் முன் சம்பந்தப்பட்ட துறைகளின் அனுமதி பெறப்படவில்லை என்று விசாரணையின்போது தெரிவித்தார். ஐந்து மாதங்கள் முடிந்த நிலையிலும் சாலை சீரமைக்கப்படவில்லை என்றும், மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்படாமல் உள்ளது என்று குறிப்பிட்டதுடன், சாலையினை பழுதாக்கிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

5. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்மாக மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவற்றை ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன :-

(1) கிருஷ்ணாநகர் விரிவுப் பகுதியைச் சுற்றியுள்ள நகர்களிலிருந்து வெளியேறும் மழை நீர் இயற்கையாகவே கிருஷ்ணா நகர் வழியாகச் செல்வது ;

(2) புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கிருஷ்ணாநகர் விரிவுப் பகுதி இயற்கையாக அமைந்திருந்த நிலத்தின் மட்டம் உயர்த்தப்பட்டு ஏற்படுத்தப்பட்டது ;

(3) கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதியில் 110 குடியிருப்புகள் உள்ளன. ஆனால் கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதியைச் சுற்றியுள்ள நகர்களில் 300 முதல் 400 குடியிருப்புகள் அமைந்துள்ளன ;

(4) மழைநீர் வடிகால்வாய் மேற்படி பகுதிகளில் அமைக்கப்படாதது.

காலமாற்றங்களினால் நகர்ப்பகுதிகள் மற்றும் புறநகர் பகுதிகள் குடியிருப்புகளாக மாறி வருகின்றன. அதன் காரணமாகவே விளைநிலங்கள் குடியிருப்பு மனைகளாக மாறிவருகின்றன. விளைநிலைங்களில் பரந்து வழிந்தோடும் மழைநீர் புதிய கட்டடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள் ஆகியவற்றால் தடுக்கப்பட்டு, வடிகால் வசதி அமைக்கப்படாத நிலங்களில் சாலைகளின் வழியே செல்ல நேரிடுகிறது. மழை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற காலங்க்ளில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுகின்றது. இந்நேர்வில் மாநகராட்சி அலுவலர்களை ஒட்டு மொத்தமாகக் குறைகூறவும் இயலாது. பழுதாக்கப்பட்ட சாலை தற்பொழுது மண்ணால் மூடப்பட்டு சமன் செய்யப்பட்டுள்ளது. எனினும், பழுதாக்கப்பட்ட சாலைப் பகுதியில் தார்போட்டு சீரமைக்கப்படும் என மாநகராட்சி அலுவலர்கள்

தெரிவித்துள்ளனர். மேலும், இப்பகுதிகளில் மழைநீர் வசதி ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. மாநகராட்சி அலுவலர்கள் நிலைமைக்கேற்றார்போல் செயல்பட்டு இதுபோன்ற நேர்வுகளுக்கு உடன் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்துவதுடன், சீர்கெட்ட சாலையினை உடன் சீரமைத்துத் தருவதற்கு 14–வது மண்டல அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், **27–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **மண்டல அலுவலர்,**
   **மண்டலம் – 14,**
   **பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **எண்.6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,**
   **புழுதிவாக்கம், சென்னை – 600 091.**

2. **திரு B. இரமேஷ்,**
   **222, புதிய கூடுதல் சட்ட அறை,**
   **உயர்நீதிமன்ற வளாகம்,**
   **சென்னை – 600 104.**

3. **மாநகராட்சி ஆணையர்,**
   **பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **ரிப்பன் கட்டிடம், சென்னை – 600 003.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**